தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை :டாக்டர்.சு. கண்ணபிரான்

ந.க அ4/ 21972 /2020 நாள்: 31.12.2021

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் - தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகு — 01.02.2016 வரை மற்றும் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர்/ இளநிலை வருவாய் ஆய்வாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது — பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்கப் பட்டவை:

1. சென்னை முதன்மைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண் ந.க. பணி 5(4)/22255/2012 நாள்: 05.11.2012. மற்றும் 23.07.2013.
2. சென்னை, முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.பணி 4(1)/3156/2015 நாள்: 11.06.2018
3. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ4/30061/2016 நாள்: 20.12.2016.
4. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ4/30063/2016 நாள்: 20.12.2016.
5. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ4/19925/2018 நாள்: 02.01.2019.
6. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ4/16455/2018 நாள்: 02.01.2019.
7. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ4/28247/2017 நாள்: 02.01.2019.
8. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ4/4047/2019 நாள்: 02.01.2019.
9. அரசாணை நிலை ஆணை எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்: 26.02.2021.
10. சென்னை, கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் கடிதம் எண் ஆ.கு3/18395/2020 நாள்: 06.08.2021
11. சென்னை, கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் கடிதம் எண் ஆ.கு3/18395/2020 நாள்: 22.11.2021.

---------

ஆணை:-

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் கடிதங்களில், தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு காலிப்பணியிடங்கள் அங்கீகரிக்கப்பட்டு, பார்வை 3 மற்றும் 4-ல் காணும் செயல்முறைகளின்படி 2 நபர்களுக்கு கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர்களாகவும், பார்வை 5,6,7 மற்றும் 8-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி 4 நபர்களுக்கு இளநிலை வருவாய் ஆய்வாளாகளாகவும் பணி நியமனம் வழங்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர்களாக/இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட நபர்களது பணியினை அவர்கள் பணியில் இணைந்த தேதியில் பணிவரன்முறை செய்வது தொடர்பான முன்மொழிவுகள் சென்னை வருவாய் நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட்டு, உத்தரவுகள் எதிர் நோக்கப்பட்டன.

இந்நிலையில் பார்வை 9-ல் காணும் அரசாணை எண் 48-ல் கருணை அடிப்படையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை பணி நியமனம் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்/ இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி பணிவரன்முறை செய்திட உத்தரவிடப்பட்டது.

| | |
|---|---|
| 5.1 | 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தமட்டு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும். |
| 5.2 | பத்தி 5.1 உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள், அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| 5.3 | கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில், அவர்களை தற்காலிக அரசு பணியாளர்களாக கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். |
| 5.4 | மேலே 5.3-ல் குறிப்பிடப்பட்ட அரசு பணியாளர்கள் பொருட்டு உரிய விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும். பின்னர் விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு குறித்த அரசாணை வெளியிடப்பட வேண்டும். |

இந்நேர்வில் சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பார்வை 10-ல் காணும் கடிதத்தில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களின் பணிவரன்முறை செய்வது தொடர்பாக கீழ்க்கண்டவாறு தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

| அரசாணை நிலை ஆணை எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்: 26.02.2021. | |
|---|---|
| 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தமட்டு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும். | **வழங்கப்பட்ட தெளிவுரை:**<br>கிராம நிருவாக அலுவலர்களுக்கு பணிநியமன அலுவலர் கோட்டாட்சியராகவும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு பணிநியமன அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) என்ற நிலையில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட அரசுப்பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம். |

| | |
|---|---|
| பத்தி 5.1 உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள், அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். | மாவட்ட ஆட்சியர் பணி நியமனம் அலுவலராக இருக்கும் பட்சத்தில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் நிலையில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம் |

பார்வை 11-ல் காணும் சென்னை கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதத்தின்படி, பார்வை 9-ல் காணும் அரசாணை எண் 48-ன்படி பணி வரன்முறை செய்திட நடவடிக்கை எடுக்கும் வகைக்கு மேற்கண்டவாறு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள்/இளநிலை வருவாய் ஆய்வாளர்களது அசல் சான்றுகள், ஆவணங்கள் சென்னை கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து திரும்ப பெறப்பட்டுள்ளன.

எனவே, அரசாணை நிலை எண் 48-க்கு வழங்கப்பட்ட தெளிவுரைகளின்படி, தொகுதி 4-ற்குட்பட்ட பணியிடமான கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி நியமன அலுவலர் கோட்டாட்சியரை விடவும் மற்றும் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு பணி நியமன அலுவலரான மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)-ஐ விடவும் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் (One level Higher than the appointing authority) அதாவது மாவட்ட வருவாய் அலுவலர் வரன்முறை செய்து உத்தரவிடலாம் என்ற அடிப்படையில் 02.02.2016 மதல் 31.12.2019 வரை பார்வை 3,4,5,6,7 மற்றும் 8-ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத கீழ்க்காணும் கிராம நிர்வாக அலுவலர்/இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் பணியினை அவர்களது பெயர்களுக்கெதிரே கலம் 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | கிராம நிர்வாக அலுவலர்/ இளநிலை வருவாய் அலுவலர் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | கிராம நிர்வாக அலுவலர்/இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | மரியசித்ரகமல்ராஜ்<br>கிராம நிர்வாக அலுவலர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஸ்ரீவைகுண்டம். | 02.01.2017 மு.ப. | 02.01.2017 மு.ப. |
| 2. | பா. சரவணன்,<br>கிராம நிர்வாக அலுவலர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருச்செந்தூர். | 02.01.2017 மு.ப. | 02.01.2017 மு.ப. |
| 3. | சந்தனக்குமார்,<br>இளநிலை வருவாய்<br>ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஒட்டப்பிடாரம். | 07.01.2019 மு.ப. | 07.01.2019 மு.ப. |

| | | | |
|---|---|---|---|
| 4. | நடராஜன், இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்செந்தூர். (இறப்பு) | 09.01.2019 மு.ப. | 09.01.2019 மு.ப. |
| 5. | சினேகா ஸ்ரீ, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,தூத்துக்குடி. | 07.01.2019 மு.ப. | 07.01.2019 மு.ப. |
| 6. | கிருஷ்ணவேணி, இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கயத்தார். | 18.03.2019 மு.ப. | 18.03.2019 மு.ப. |

மேற்காணும் அட்டவணையில் கண்டுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள்/ இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் பணிவரன்முறை தொடர்பாக தனியர்களின் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- சு. கண்ணபிரான்
மாவட்ட வருவாய் அலுவலர்,
தூத்துக்குடி

பெறுநர்:
மேற்கண்ட கிராம நிர்வாக அலுவலர்கள்/இளநிலை வருவாய் ஆய்வாளர்கள்
-- தொடர்புடைய அலுவலகத் தலைவர் மூலமாக

நகல்:
1. கோட்டாட்சியர், தூத்துக்குடி/திருச்செந்தூர்/கோவில்பட்டி.
2. வட்டாட்சியர், ஸ்ரீவைகுண்டம்/திருச்செந்தூர்/ஓட்டப்பிடாரம்.
3. தலைமை உதவியாளர், கே பிரிவு , மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி.
4. மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர்
5. அ4 இருப்புக் கோப்பு
6. உபரி ___ 1.

நகல்:
முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள்,
வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சென்னை -5 ___ பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

/ஆ.ப.அ.ப/

அலுவலக மேலாளர் (பொது)